**டிசம்பர் - 11**

**"என் மகனே, உன் இருதயத்தை எனக்குத் தா. உன் கண்கள் என்  வழிகளை நோக்குவதாக."**

**- நீதி 23.26.**

தேவனுக்குக் கொடுக்கப்பட்ட இருதயம், சித்தம், தெய்வீகச் சித்தத்தை அறிந்து கொள்ளவும், தெய்வீக எண்ணத்தைப் பிடித்துக்கொள்ளவும், வார்த்தையிலும், கிரியையிலும் அதற்குக் கீழ்ப்படியவும் நாடுகிறது. இந்தப்புது மனதின் நிலைமை அடைவதற்குச் சமமாக அதே அளவில், எல்லா விதத்திலும் அதாவது, உயரிய நோக்கங்கள், நம்பிக்கை, மனோபாவம், முயற்சிகள் இவைகளில் ஒரு புதிதான ஜீவியமாயிருப்பதற்கு ஆரம்பம் ஏற்படும். இந்தக் காரணத்துக்காகவே தெய்வீகச் சித்தமும் ஏற்படும் சம்பந்தமான வெளிப்படுத்துதல் விசுவாசிகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஏனென்றால், அதன் அறிவின் வளர்ச்சியாலும், இந்தக் காரியங்களின் பேரில் சிந்தித்துக் கொண்டிருப்பதினாலும், தெய்வீக ஏற்பாடு, சித்தம் இவைகளால் மனதை நிரப்புவதாலும்,  குணத்தைத் திருத்தும் செல்வாக்கு ஜீவியத்தின் எல்லா வழிகளிலும் பரவும். **- Z 01, 324 (R 2890).**

கர்த்தர் நம்முடைய மனதையும், நம்முடைய பற்றுதல்களையும் நம்முடைய சித்தத்தையும் விரும்புகிறார். அவர் நம்முடைய மனதை வேண்டுகிறார். அதன் பலனாக அதிலுள்ள பாவமுள்ள தப்பான, சுயநலமான, உலகப்பிரகாரமான எண்ணங்களைக் காலிசெய்து, அதை நீதியுள்ள, உண்மையுள்ள, அன்புள்ள, ஆவிக்குரிய எண்ணங்களால் நிரப்புவதால், இவ்விதமாகக் காலி செய்யப்பட்டு நிரப்பப்பட்டு நம்முடைய மனது மற்றவர்களையும் நம்மையும் ஆசிர்வதிப்பதற்காக எஜமானுடைய உபயோகத்துக்குத் தகுந்த பரிசுத்தமுள்ள பாத்திரமாகும். அவர் நம்முடைய பற்றுதல்களையும், நோக்கங்களையும், புறம்பே கழித்துப் போட்டுவிட்டு அவைகளை நீதியுள்ள, உண்மையுள்ள, அன்புள்ள ஆவிக்குரிய பற்றுதல்களாலும், நோக்கங்களாலும் நிரப்பி இவ்விதமாக சுத்தி செய்யப்பட்ட நிரப்பப்பட்ட இருதயம் மற்றவர்களையும் நம்மையும் ஆசிர்வதிப்பதற்காக எஜமானுடைய உபயோகத்துக்குத் தகுந்த பரிசுத்தமுள்ள பாத்திரமாகும். ஆகையால், நம்முடைய இருதயத்தையும், மனதையும் தேவனுக்கு ஒப்புவிக்க  நம்முடைய மூலவாக்கியம் அன்புடன் நம்மை ஏவுகிறது. இவ்விதமாகத் தன்னை ஒப்புவித்து, அதன் விளைவாக இருதயமும், மனமும் வளமாக்கப்பட்டவனே பாக்கியவானாக இருக்கிறான். **- P 30, 184.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**சங் 119.9, பிர 12.1, மத் 13.15, 16.24, யோவா 17.17, ரோம 6.13, 16.19, 12.1, 15.16, 2கொரி 8.5, கால 2.20, கொலோ 2.11, எபி 10.5-7,10.**

**கோபுர வாசிப்பு :  Z 16, 163 (R 5905)**

**வினாக்கள் : எனது பிரதிஷ்டையின் சம்பந்தமாக நாம் இந்த வாரத்தில் என்ன செய்தேன்? எப்படிச் செய்தேன்? அதன் பலன் என்ன?**